கிறார்கள். மூன்று ரிசர்வ் ஸ்தானங்கள் ஃபில் அப் ஆகாமல் இருக்கின்றனவே தவிர, டிஸ்பென்சரிகள் எல்லாம் 'ஃபுல்லி ஸ்டாஃப்டு'.

மரக்காணம் நகரப் பஞ்சாயத்து

*419 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம், மரக்காணம் டவுன் பஞ்சாயத்தில் அரிஜன காலனிகளுக்கும், மீனவர்கள் வாழுகின்ற பகுதிகளுக்கும் போட்டுக் கொடுக்க வேண்டிய கிளை ரோடுகள் எத்தனை?

(இ) டவுன் பஞ்சாயத்தாக மாற்றப்பட்ட பின், எத்தனை ரோடுகள் விளக்குகள் எந்தெந்த இடங்களுக்குப் போட்டுக் கொடுக்கப்பட்டன?

(உ) இது குறித்து, துரித நடவடிக்கை எடுக்கக் கோரி 25—9—1965-ல் மரக்காணம் டவுன் பஞ்சாயத்தில் நிறைவேற்றிய தீர்மானம் அரசாங்கத்தின் பார்வைக்கு வந்ததா?

(எ) ஆமெனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்:

(அ) 1. மீனவர் காலனி—4 ரோடுகள்.

2. அரிஜன காலனி—3 ரோடுகள்.

(இ) கீழ்க்கண்ட ரோடுகள் போடப்பட்டன—

1. மாரியம்மன் கோவில் வடக்குத் தெரு.

2. கிருஷ்ணசாமி கவுண்டர் தெரு.

3. பாலகிருஷ்ண முதலியார் தெரு.

4. பஜனைகோவில் தெரு.

5. கைப்பாணிக் கிராமம் இருந்து கைப்பாணிக் குப்பம் வரை.

புதிதாக விளக்குகள் போடவில்லை.

(உ) இது குறித்து 25—9—1965-ல் மரக்காணம் டவுன் பஞ்சாயத்தில் நிறைவேற்றப்பட்டதாகத் தீர்மானம் எதுவும் அரசாங்கத்தின் பார்வைக்கு வரவில்லை.

(எ) கேள்விக்கு இடமில்லை.

4th November 1966]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கைப்பாணிக் குப்பம் வரை ரோடு போட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை நேரில் பார்த்துச் சொல்கிறார்களா அல்லது ரிப்போர்ட்டில் இருந்து பதில் சொல்லுகிறார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர்களுடைய ஒவ்வொரு கேள்விக்கும் அமைச்சர்கள் நேரில் சென்று பார்த்துப் பதில் சொல்வது என்பது இயலாது.

பாலமான் கால்வாய் மீது மதகு

*420 கேள்வி.—**திரு. சீ. சிவசுப்ரமணியன்** : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூக்காவில், சிதம்பரநாதன் பேட்டை கிராமத்திற்கு நடராஜபுரம் ரோட்டிலிருந்து பாலமான் வாய்க்காலைக் கடந்துபோக ஒரு மதகு கட்டிக் கொடுக்க வேண்டி அரசாங்கத்திற்கு ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை. ஆனால் மாவட்ட வளர்ச்சி மன்றம் நிறைவேற்றிய ஒரு தீர்மானம் அரசாங்கத்திற்கு வந்துள்ளது.

(இ) இந்தப் பணியை எந்தத் திட்டத்தின் கீழும் தற்பொழுது எடுத்துக்கொள்ள இயலாது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION.

RELIEF TO FISHERMEN AND OTHER VICTIMS OF CYCLONE.

***திரு. இராம. அரங்கண்ணல்** : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விஷயத்தை விவாதிப்பதற்காக சபையினுடைய நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி நான் கொண்டு வந்திருக்கின்ற பிரேரணையின் குறிப்பைப் படிக்க விரும்புகிறேன்.

"நேற்றைய கோரப் புயலின் காரணமாகச் சென்னை மாநகரமே அவதிக்குட்பட்டிருக்கிறது என்றாலும், ஆங்காங்கு உள்ள குடிசைவாழ் பகுதிகள் யாவும், புயலாலும் மழையாலும் நாசமாயிருக்கின்றன. கடலோரங்களில் வாழும் மீனவர்களுடைய குடிசைகள் போய் ஒண்ட இடமில்லாமல் உணவுக்கு வழியில்லாமல் அவதிப்படுகின்றனர். அவதிப்படும் ஏழை மக்க